செ.வெ. எண்: 68 நாள்: 24.01.2012

# செய்தி வெளியீடு

மாநிலத்தில் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சிக் காரணமாக, அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருகி வருகின்றது. இவர்களின் நலனைப் பேணும் வகையில் 1982 ஆம் ஆண்டில் தமிழக அரசால் தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவு 6-ன்படி தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. தொழிலாளர்கள் நலனில் குறிப்பாக அமைப்பு சாரா தொழிலாளர்கள் பணிகள் மற்றும் வாழ்க்கைத் தரம் மேன்மை அடைவதில் பெரிதும் அக்கறைக் கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தனது முந்தைய ஆட்சிக் காலத்தில் அதாவது 1994 ஆம் ஆண்டில், தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டத்தினை ஏற்படுத்தினார்கள்.

தற்பொழுது கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்று, ஓய்வூதியம் பெறும் கட்டுமானத் தொழிலாளி இறந்து விட்டால், பெண் தொழிலாளியாக இருந்தால், அவரது கணவருக்கும், ஆண் தொழிலாளியாக இருந்தால், அவரது மனைவிக்கும் குடும்ப ஓய்வூதியமாக 400 ரூபாய் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

இதன் பலனை கட்டுமானத் தொழிலாளர்கள் பெறும் வகையில், 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டத்தின் கூறு (Clause) 13–க்கு உரிய திருத்தங்கள் வெளியிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.
நாள்: 24.1.2012